செய்தி வெளியீடு எண்: 635 நாள்:25.09.2019

## செய்தி வெளியீடு

### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு மத்திய நிதி மற்றும் பெரு நிறுவனங்கள் விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களின் உத்தரவின்படி அமைக்கப்பட்ட மத்திய குழுவுடன் தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகளும் கரும்பு விவசாயிகள் மற்றும் சர்க்கரை ஆலைகளின் பிரச்சனைகளை களைய கூட்டப்பட்ட சிறப்பு கூட்ட விவரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களை 29.7.2019 அன்று தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சங்க தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நேரில் சந்தித்து மாநில மற்றும் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படும் உதவிகள் மற்றும் கொள்கை முடிவுகள் குறித்த கோரிக்கை மனுவினை அளித்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கரும்பு விவசாயிகள் மற்றும் தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம், தமிழ்நாடு அவர்களின் கோரிக்கைகளை பரிசீலிக்க மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஆகியோர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவும் சம்பந்தப்பட்ட துறை உயர் அதிகாரிகளும் கலந்து கொண்ட கூட்டம் 22.8.2019 அன்று நடந்தது. அக்கூட்டத்தில், தமிழ்நாடு அரசு அளவில் எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் 10.9.2019 அன்று நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சங்க தலைவர், அதன் உறுப்பினர்கள், கரும்பு விவசாயிகள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்த மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர், மத்திய அரசின் உணவு மற்றும் பொது வழங்கல் துறை, நிதித்துறை மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி ஆகிய துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்களை சென்னைக்கு அனுப்பி அவர்கள் மூலம் உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

அதன் அடிப்படையில், மத்திய நிதி அமைச்சகத்தைச் சார்ந்த திரு.பங்கஜ் ஜெயின், இ.ஆ.ப., கூடுதல் செயலர் (நிதி சேவைகள்), திரு. சுசீந்திர மிஸ்ரா, இணைச் செயலர் (நிதிச் சேவைகள்), மத்திய அரசின் உணவு மற்றும் பொது வழங்கல் துறையைச் சார்ந்த திரு. சுரேஷ் குமார் வஸிஸ்த், இணைச் செயலர் (சர்க்கரை மற்றும் நிர்வாகம்), இந்திய ரிசர்வ் வங்கியைச் சார்ந்த திரு. சுமன் ரே, தலைமை பொது மேலாளர்,

திருமதி மோகனா, பொது மேலாளர், தமிழ்நாடு அரசின் சார்பில் தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., நிதித்துறை (செலவினம்) முதன்மைச் செயலாளர் திரு. மு.அ. சித்திக், இ.ஆ.ப., சர்க்கரைத் துறை ஆணையர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு தலைமை வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பாரத மாநில வங்கி, கார்ப்பரேஷன் வங்கி, கனரா வங்கி, ஆந்திரா வங்கி, பாங்க் ஆப் இந்தியா, யூனியன் வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி உள்ளிட்ட வங்கிகளின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்கள், பொது மேலாளர்கள், மாநில அளவிலான வங்கிகளின் ஒருங்கிணைப்பாளர், தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்க தலைவர் திரு.பழனி ஜி.பெரியசாமி மற்றும் உறுப்பினர்கள், தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம், தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு மற்றும் புதுவை மாநில அனைத்து கரும்பு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு, இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு, மதுராந்தகம் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கம், அம்பிகா சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கம், விவசாயிகள் சட்ட இயக்கம் சார்ந்த விவசாய பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் 24.9.2019 அன்று அரசு விருந்தினர் இல்லம், சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கரும்பு விவசாயிகள் தங்களுக்கு கிடைக்க வேண்டிய மத்திய அரசின் நியாயமான மற்றும் ஆதாய விலை நிலுவை, வங்கிகளில் கரும்பு பயிர்க் கடன் பெறுவதில் உள்ள பிரச்சனைகள், சில சர்க்கரை ஆலைகளிலிருந்து கரும்பு விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையை பெறுவதிலுள்ள பிரச்சனைகள் குறித்து தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

தற்பொழுது சர்க்கரை ஆலைகள் சந்தித்து வரும் நிதி நெருக்கடிக்கான காரணங்கள் குறித்தும், தங்களுடைய வங்கி கடன் தொடர்பான நடைமுறைகள் குறித்தும், நிதி நெருக்கடியிலிருந்து சர்க்கரை ஆலைகள் மீண்டுவர மத்திய அரசால் எடுக்கப்பட வேண்டிய கொள்கை முடிவுகள் குறித்தும், தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளுக்கு தேவைப்படும் நிதி வழிவகைகள் குறித்தும், தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சங்க தலைவர் மற்றும் உறுப்பினர்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மத்திய அரசால் 2016–17 அரவைப் பருவத்தில் அறிவிக்கப்பட்ட நியாயமான மற்றும் ஆதாய விலையான (FRP) ரூ.2,550 உடன், தமிழ்நாடு அரசு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.200 வீதம் வழங்கி வந்தது. இதன்மூலம், 1,44,882 கரும்பு விவசாயிகள் பயன் பெற்றனர். இந்த ஆண்டு, மத்திய அரசு 2017–18 அரவைப் பருவத்தில் நியாயமான மற்றும்

ஆதாய விலை (FRP) ரூ.**2612.50** ஆக அறிவித்துள்ள நிலையில், மாண்புமிகு அம்மாவின் அரசு டன் ஒன்றுக்கு ரூ.**137.50** ஊக்கத்தொகையாக அறிவித்துள்ளது. **கரும்பு விவசாயிகளின் நலன் காக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதற்கென நிதிநிலை அறிக்கையில் ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.** மேலும், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை ஆலைகள், வேளாண் பெருமக்களுக்கு கரும்பு விலை வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசு அவ்வப்போது வழிவகை கடன்கள் வழங்கி வருவதையும், மேலும் தனியார் மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு தேவைப்படும் மத்திய அரசின் கொள்கை முடிவுகள் குறித்தும், அரசு சார்பாக தொழில் துறை முதன்மைச் செயலாளர், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர், நிதித்துறை (செலவினம்) செயலாளர் மற்றும் சர்க்கரைத் துறை ஆணையர் ஆகியோர் தெளிவாக எடுத்துரைத்தனர்.

இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு (Debt Restructuring) உள்ளிட்ட அனைத்து கோரிக்கைகள் குறித்து மத்திய அரசுடன் ஆலோசனை செய்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

——————

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**